# தமிழ்நாடு அரசு

# வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை

**பிரிவு : TNPSC ஒருங்கிணைந்த குடிமைப்பணிகள் தேர்வு - 4 (தொகுதி 4 & வி ஏ ஓ)**

**பாடம் : இந்திய அரசியலமைப்பு**

**பகுதி : குடியுரிமை**

**© காப்புரிமை :**

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் **ஒருங்கிணைந்த குடிமைப்பணிகள் தேர்வு - 4 (தொகுதி 4 & வி ஏ ஓ)** க்கான மென்பாடக்குறிப்புகள், போட்டித் தேர்விற்கு தயாராகும் மாணவ, மாணவிகளுக்கு உதவிடும் வகையில் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையால் தயாரிக்கப்பட்டுள்ளது. இம்மென்பாடக் குறிப்புகளுக்கான காப்புரிமை வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையைச் சார்ந்தது என தெரிவிக்கப்படுகிறது. எந்த ஒரு தனிநபரோ அல்லது தனியார் போட்டித் தேர்வு பயிற்சி மையமோ இம்மென்பாடக் குறிப்புகளை எந்த வகையிலும் மறுபிரதி எடுக்கவோ, மறு ஆக்கம் செய்திடவோ, விற்பனை செய்யும் முயற்சியிலோ ஈடுபடுதல் கூடாது. மீறினால் இந்திய காப்புரிமை சட்டத்தின்கீழ் தண்டிக்கப்பட ஏதுவாகும் என தெரிவிக்கப்படுகிறது. இது முற்றிலும் போட்டித் தேர்வுகளுக்கு தயார் செய்யும் மாணவர்களுக்கு வழங்கப்படும் கட்டணமில்லா சேவையாகும்.

**ஆணையர்,**

**வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை**

## PART – II குடியுரிமை ART 5-11

- ✓ **CITIZEN** என்ற சொல் சிவிஸ் என்ற <u>லத்தீன்</u> சொல்லலிருந்து தோன்றியது.
- ✓ இந்தியாவில் ஒற்றை குடியுரிமை முறை (நாட்டிற்கு மட்டும்) பின்பற்றப்படுகிறது.
- ✓ இரட்டை குடியுரிமையை (நாட்டிற்கு ஒரு குடியுரிமை, மாகாணத்திற்கு ஒரு குடியுரிமை) பின்பற்றும் நாடுகள் = USA, SWIZZ
- ✓ இந்திய குடியுரிமை சட்டம் 1955-ல் இயற்றப்பட்டது.
- ✓ இச்சட்டம் **1986, 1992, 2003, 2005** ஆகிய 4 முறை திருத்தப்பட்டது.
- ✓ **2003**-ல் **L.M**.சிங்வி குழுவின் பரிந்துரைப்படி குடியுரிமை சட்டம் திருத்தப்பட்டு SWIZZ, AUS, CANADA, ISRAEL, USA, PORCHES, FRANCE, SWEDAN, NEWZEALAND, GREEKS, SYPRAS, ITALY, FINLAND, IRELAND, NETHERLAND, ENGLAND, ஆகிய 16 நாடுகளில் வாழும் வெளிநாடுவாழ் இந்தியர்களுக்கு இரட்டை குடியுரிமை (அவர் வசிக்கும் நாட்டிலும் , நம் நாட்டிலும் குடியுரிமை வைத்து கொள்ளுதல்) வழங்கப்பட்டது.
- ✓ **2003-JAN-9** முதல் ஒவ்வொரு ஆண்டும் JAN-9 ம் நாளை பிரவேசிய பாரதிய திவாஸ் - வெளிநாடுவாழ் இந்தியர் தினம் கொண்டாடப்படுகிறது.
- ✓ **1915-JAN-9** அன்று மகாத்மா காந்தி தென்ஆப்ரிக்காவில் இருந்து இந்தியா வந்தது நினைவாக JAN-9 வெ.வா.இ.தினம் கொண்டாடப்படுகிறது.
- ✓ **2011** முதல் வெளிநாடுவாழ் இந்தியர்களுக்கு வாக்குரிமை வழங்கப்பட்டது.
- ✓ இந்திய குடியுரிமையை 5 வழிகளில் பெறலாம், 3 வழிகளில் இழக்கலாம்.

### இந்திய குடியுரிமையை பெறும் வழிகள்

1. பிறப்பின் மூலம் (BY BIRTH)

- ✓ அரசியலமைப்பு சட்டம் நடைமுறைக்கு வந்த நாளான **26-1-1950** முதல் இந்தியாவில் பிறந்தவர்கள் பிறப்பின் மூலம் இந்திய குடியுரிமையை பெறலாம்

2. மரபு (அ) வம்சாவழி மூலம் (BY DOMICLE OR DESCENT)

- ✓ **26-1-1950**-க்கு பின் வெளிநாட்டில் பிறந்து அவரது பெற்றோர் இந்திய குடிமகனாக இருந்தால் இந்திய குடியுரிமையை பெறலாம்.

3. பதிவு செய்வதன் மூலம்

- ✓ அயல்நாட்டினர் தொடர்ந்து 7 ஆண்டுகளில் 5 ஆண்டுகள் இந்தியாவில் நிரந்தரமாக வசித்து விண்ணப்பித்து பதிவு செய்து இந்திய குடியுரிமையை பெறலாம்

4. இயல்பு (அ) அயல்நாட்டவர் குடியுரிமை(BY NATURALIZATION)

- ✓ அயல்நாட்டினர் இந்தியாவில் 1 ஆண்டு நிரந்தரமாக வசித்து குடியுரிமை சட்டத்தில் 3-வது அட்டவணையில் உள்ள தகுதிகளை பெற்றிருந்தால் இந்திய குடியுரிமையை பெறலாம்

5. புதிய பகுதிகளை இணைத்தல் மூலம்(BY INCORPARATION)

- ✓ இந்தியாவுடன் புதிய பகுதிகளை இணைப்பதன் மூலம் அப்பகுதி மக்கள் அனைவரும் இந்திய குடியுரிமையை பெறுவர்
- ✓ EX : **PONDYCHERRY-1962, GOA-1962, SIKKIM -1974**

## இந்திய குடியுரிமையை இழக்கும் முறைகள்

1. விளம்புகை (அ) துறத்தல் - BY DECLARATION

- ✓ இந்தியன் குடிமகன் தனது இந்திய குடியுரிமையை தானே விரும்பி துறத்தல்.
- ✓ அல்லது விண்ணப்பம் அளித்து துறத்தல்

2. நீக்குதல் (அ) விளக்கி வைத்தல்- TERMINATION

- ✓ இந்திய குடிமகன் வெளிநாட்டில் குடியுரிமை பெற்றால் பாராளுமன்றம் அவரது இந்திய குடியரிமையை நீக்கும்

3. பரித்தல் - BY DEPRIVATION

- ✓ முறைகேடாக இந்திய குடியுரிமையை பெறுதல் (அ) இந்திய அரசியலமைப்பு சட்டத்தை மீறி செயல்படுதல் ஆகிய காரணங்களுக்காக பாராளுமன்றம் அவரது இந்திய குடியுரிமையை பரிக்கும்.
- ✓ இந்திய குடியுரிமையை வழங்க, நீக்க, (ம) கட்டுபடுத்த (அ) ஒழுங்குபடுத்த அதிகாரம் பெற்ற அமைப்பு நாடாளுமன்றம் (**ART-11**)

### ART-5

- ✓ இந்திய அரசியலமைப்பு சட்டம் நடைமுறைக்கு வந்த நாள (**26-1-1950**) முதல் இந்தியாவில் பிறந்தவர்கள் இந்திய குடிமக்கள்.

**ART-6**

- ✓ **19-7-1948**-க்கு முன் பாகிஸ்தானிலிருந்து இந்தியாவிற்கு குடி பெயர்ந்தவர்களுக்கு இந்திய குடியுரிமை வழங்குவது பற்றி குறிப்பிடுகிறது.

**ART-7**

- ✓ **1-3-1947**-க்கு பின் இந்தியாவிலிருந்து பாகிஸ்தானிற்கு குடிபெயர்ந்தவர்களுக்கு இந்திய குடியுரிமை பற்றி குறிப்பிடுகிறது.

**ART-8**

- அயல்நாடுகளிலுள்ள இந்திய வம்சாவழியினருக்கு (இந்தியாவை பூர்வீகமாக கொண்டு வெளிநாடுகளில் வசிப்பவர்களுக்க) இந்திய குடியுரிமை வழங்குவது பற்றி குறிப்பிடுகிறது.

**ART-9**

- இந்திய குடிமகன் வெளிநாட்டில் குடியுரிமை பெற்றால் அவரது இந்திய குடியுரிமையை இழப்பார் என குறிப்பிடுகிறது.

**ART-10**

- நாடாளுமன்றம் ஒருவரது இந்திய குடியுரிமையை நீக்கி சட்டம் இயற்றும்வரை அவர் தனது இந்திய குடியுரிமையை தொடரலாம் என குறிப்பிடுகிறது.

**ART-11**

- குடியுரிமையை ஒழுங்குபடுத்துவதற்கும் கட்டுப்படுத்துவதற்கும் அதிகாரம் பெற்றது பாராளுமன்றம் என குறிப்பிடுகிறது.